சுற்றறிக்கை இல 02/2017

எனது இல சிபாதி 3/5/2/1

சிவில் நிர்வாகப் பிரிவு,

சிவில் பாதுகாப்புத் திணைக்களம்,

இல 23, புகையிரத நிலைய வீதி,

பம்பலப்பிட்டி.

2017.01.

தலைமையக பதவிநிலை உத்தியோகத்தர்
சகல படைப்பிரிவுகளினதும் கட்டளையிடும் அதிகாரிகள் / பயிற்சிப் பாடசாலைகளின் கட்டளையிடும் அதிகாரிகள் மற்றும் கருத்திட்டங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்.

**நலன்களுக்கு விண்ணப்பிக்கும் போது முனைப்பான சேவையில் ஈடுபட்டுள்ளதை உறுதிப்படுத்தல்**

சிவில் பாதுகாப்பு அங்கத்தவர்கள் நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்துடைய நிலைக்கு நியமிக்கப்பட்ட பின்னர் அவர்கள் அக்ரஹார காப்புறுதி, இடர் கடன், விசேட மற்றும் உற்சவ முற்பண முறைகளுடன் தொடர்பு படுவதனால் அவர்கள் தற்போது அவற்றில் முனைப்பான அங்கத்தவர்களாக மாறியுள்ளனர். அதற்கிணங்க, ஏற்புடைய கோவைகள், சிவில் பாதுகாப்பு திணைக்கள தலைமையகத்தின் சிவில் நிர்வாகப் பிரிவுக்கு நாளாந்தம் கிடைத்த வண்ணம் உள்ளன.

02. அத்தகைய கோவைகளை சமர்ப்பிக்கும் போது ஏற்புடைய அங்கத்தவர் முனைப்பான சேவையில் இருந்தால் மாத்திரமே நலவுரித்துக்கு உரிமைக் கோர முடியும்.

03. எனவே, எதிர்காலத்தில் மேற்படி ஏதேனும் நலத்திட்டத்தின் கீழ் உரிமைக் கோருவதற்கு கோவைகளை சமர்ப்பிக்கும் போது கட்டாயமாக உரிமைக் கோரும் ஆண் / பெண் அங்கத்தவர் முனைப்பான சேவையில் உள்ளாரா என்பதை ஏற்புடைய பதவிநிலை உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தி அது தொடர்பாக விண்ணப்பத்தில் குறிப்பிட்டு (கையொப்பம் மற்றும் பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தல் வேண்டும்) தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கும் படி அறியத்தருகின்றேன்.

04. அவ்வாறு உறுதிப்படுத்தப்படாத கோவைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

**சந்திரரத்ன பல்லேகம**
**பணிப்பாளர் நாயகம்**